# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, அநுராதபுரம் ஸ்ரீ புஷ்பதான அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2011, ஓகத்து மாதம் 26 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**2011 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, அநுராதபுரம் ஸ்ரீ புஷ்பதான அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

**அநுராதபுரம் ஸ்ரீ புஷ்பதான அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

"அநுராதபுரம் ஸ்ரீ புஷ்பதான அபிவிருத்தி மன்றம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச், சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்கென இலங்கையில் அநுராதபுரத்தில் இதற்குமுன்னர் உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது அதனைக் கூட்டிணைப்பதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் உசிதமானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, அநுராதபுரம் ஸ்ரீ புஷ்பதான அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "அநுராதபுரம் ஸ்ரீ புஷ்பதான அபிவிருத்தி மன்றத்தின்" தற்போதைய உறுப்பினர்களாகவுள்ளவர்களும் அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "அநுராதபுரம் ஸ்ரீ புஷ்பதான அபிவிருத்தி மன்றம்" என்ற பெயர்மகுடத்தின்கீழ், இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அதற்கு முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும். அநுராதபுரம் ஸ்ரீ புஷ்பதான அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது –

(அ) அநுராதபுரம் புனித இடப்பரப்பிற்குள் பௌத்த கலாசார மரபுரிமையைப் பாதுகாத்தல் ;

(ஆ) அநுராதபுரம் புனித இடப்பரப்பை வந்தடையும் பௌத்த மதப் பக்தர்களிடையே மலர்களை இலவச மாகப் பகிர்ந்தளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல்;

(இ) வருகைதரும் பிக்குகள் (மதகுருக்கள்), உபாசகா, உபாசிகா, வறியவர்கள், பயணிகள், யாசகர்கள் ஆகியோருக்கு ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் “தானம்” (மதிய உணவு) “கிலன்பச” (மாலை உணவு) என்பன வழங்குதல் ;

(ஈ) அநுராதபுரம் புனித இடப்பரப்பிலுள்ள பௌத்த மதப் பக்தர்களுக்கு சில் மற்றும் தியான வகுப்பு களையும் தம்ம பிரசாரங்களையும் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்தல் ;

(உ) விசேட திருவிழாக் காலங்களில் யாத்திரிகர்களுக்குரிய தனிப்பட்ட உடைமைகளைப் பாதுகாப்பதற்கு ஒழுங்கு கள் செய்தலும் அவர்களுக்கு அவசியமான ஏனைய வசதிகளை வழங்குதலும் ;

(ஊ) பௌத்த மதத்தை ஊக்குவிப்பதற்கு தம்ம நூல் களையும் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிடுதலும் பௌத்த நூலக சேவையொன்றைத் தாபித்தலும் ;

(எ) பௌத்த மதகுருக்களுக்கும் வறிய பௌத்த சிறுவர் களுக்கும் அவர்களது கல்வியில் துணைபுரிதலும் அவர்களுக்குப் புலமைப்பரிசில்களை ஒழுங்கு செய்தலும் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுடன் ஒத்த குறிக் கோள்களையுடைய ஏனைய பௌத்த நிறுவனங்களு டன் ஒருங்கிணைந்து செயற்படுதல் ;

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்கள் உட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான அத்தகைய எல்லா அல்லது ஏதேனுமொரு செயல்களையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் –

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படக் கூடியவாறான காணியை அல்லது கட்டிடத்தைக் கொள்வனவு செய்வதற்கும் கொள்ளுவதற்கும், வாடகைக்குப் பெறுவதற்கும் நிர்மாணிப்பதற்கும் அல்லது வேறுவகையில் பெறுவதற்கும் ;

(ஆ) உள்ளூர் வளங்களிலிருந்தாயினும்சரி, வெளிநாட்டு வளங்களிலிருந்தாயினும்சரி காசாக அல்லது பொருளாக மானியங்களை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் ;

(இ) கூட்டுத்தாபனத்துக்குரிய அல்லது அதனால் வைத்திருக்கப்படும் காணியில் ஏதேனும் கட்டிடத்தை அல்லது நிறுவுகையை நிறுவுவதற்கும் அல்லது நிறுவுவிப்பதற்கும் ;

(ஈ) மாற்றுண்டியல்களையும் காசோலைகளையும் வாக்குறுதிப்பத்திரங்களையும் கொடுத்து மாற்றத்தகு வேறு சாசனங்களைச் செய்வதற்கும், வரைவதற்கும் தள்ளுபடி செய்வதற்கும், புறக்குறிப்பு செய்வதற்கும் கொடுத்து மாற்றுவதற்கும், விற்பனை செய்வதற்கும் வழங்குவதற்கும் அத்துடன் ஏதேனும் வங்கியில் நடைமுறை, சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக் கணக்குகளை பேணுவதற்கும் மூடிவிடுவதற்கும்;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை பொருத்தமானதெனக் குழு தீர்மானிக்கக்கூடிய அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும் ;

(ஊ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பாதிக்கும் சட்டபூர்வமான நம்பிக்கைப் பொறுப்புக்களையும் நிபந்தனைகளையும் பொறுப்பேற்பதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் நிர்வகிப்பதற்கும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமிப்பதற்கும் தொழிலுக்கமர்த்துவதற்கும், வேலைநீக்கம் செய்வதற்கும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துவதற்கும் அத்துடன் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும் படிகளையும் பணிக்கொடைகளையும் செலுத்துவதற்கும் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதற்கும் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட கருமங்களில் ஆளணியினரைப் பயிற்றுவிப்பதற்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய 8 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறும் அதற்கிணங்க தெரிவுசெய்யப்பட்ட பிரதம தவிசாளர் ஒருவரையும் ஏழு துணைத் தவிசாளர்களையும் ஒரு பிரதம செயலாளரையும், துணைச்செயலாளரையும், ஒரு பொருளாளரையும், கணக்காளரையும் பத்தொன்பது வேறு குழு உறுப்பினர்களையும் கொண்ட குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது குழு இச்சட்டம் தொடங்குகின்ற திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த மன்றத்தின் குழு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அவர்கள் கூட்டுத்தாபன விதிகளின் கீழ் புதிய குழு தெரிவுசெய்யப்படும்வரை பதவிவகித்தல் வேண்டும்.

*உறுப்பினர்களின் இடாப்பு.*

**6.** (1) சபை இடாப்பொன்றைப் பேணச் செய்வித்தல் வேண்டும். இச்சட்டம் தொடங்கும் தேதியன்று கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராகவிருக்கும் ஒவ்வோராளும் இதனகத்துப்பின்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராக அனுமதிக்கப்படும் ஒவ்வோராளும் அவரது பெயரை அத்தகைய இடாப்பில் பொறிக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) இடாப்பில் பின்வரும் விவரங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு உறுப்பினரினதும் பெயர், முகவரி, வாழ்க்கைத்தொழில் ;

(ஆ) உறுப்பினரின் பெயர் இடாப்பில் பொறிக்கப்பட்ட தேதி ; அத்துடன்

(இ) எவரேனும் ஆள் உறுப்பினராக இல்லாதொழிந்த தேதி.

உறுப்பாண்மையை இல்லாதொழித்தல்.

**7.** பின்வரும் காரணங்களுள் ஒன்று உறுப்பாண்மையை இல்லாதொழிக்கச் செய்விக்கலாம்.

(அ) உறுப்பினரின் இறப்பின்மீது ;

(ஆ) பதவிதுறத்தலில் ;

(இ) உளவியல் தகைமையின்மை ; அத்துடன்

(ஈ) எவையேனும் விதிகளின் மீறுகை.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**8.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டிற்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றிற்காகவும் இச்சட்டத்தின் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களை வகுப்பாக்கம் செய்தல், சேர்த்துக் கொள்ளல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை நீக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தெரிவுசெய்தல் அவர்கள் பதவி விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது அவர்களை பதவிதாங்குநர்களின் பதவியிலிருந்து நீக்குதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், நடத்தை அத்துடன் கடமைகள், பணிகள் ;

(இ) குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல், அத்துடன் அவர்களின் தத்துவங்கள், நடத்தை மற்றும் கடமைகள், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களின் பதவிக் காலம் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறுபட்ட அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்களின் தத்துவங்கள், நடத்தைகள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(உ) குழுக் கூட்டங்களில் அனுசரிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறை, அத்தகைய கூட்டங்களைக் கூட்டுதல் மற்றும் நடத்துதல், அத்தகைய கூட்டத்தின் நேரங்கள், இடங்கள், அறிவித்தல்கள் நிகழ்ச்சி நிரல், அதற்கான கூட்ட நடப்பெண் அத்துடன் அதன் குறிக்கோள்களை எய்துதல் ; அத்துடன்

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றாக அதேபோன்ற கூட்டமொன்றிலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கொடைகள், விருப்பாவணக் கையளிப்புகள், நன்கொடைகள், ஒப்பப்பணங்கள் என்றவகையில் இதற்குமுன்னர் அல்லது இதன்பின்னர் பெறப்படும் எல்லாப் பணங்களும் குழுவால் தீர்மானிக்கப்படக்கூடிய வங்கியொன்றில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும் நிறைவேற்றுகையிலும் கூட்டுத்தாபனத்தால் ஏற்பட்ட ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*மன்றத்தால் செலுத்தப்பட வேண்டியவைவும் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.*

***10.*** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்பாலதான ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின கணக்குகளும் கணக்காய்வும்.*

***11.*** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் சபையால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காளரொருவரால் கணக்காய்வு செய்யப் படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(i) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளரொருவராக தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ; அல்லது

(ii) எந்தக் கணக்காளர் குழுமமொன்றில் வதியும் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருளாகும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**12.** கூட்டுத்தாபனம் கொள்வனவு, மானியக்கொடை, நன்கொடை, மரணசாசனக் கையளிப்பு என்றவகையில் அல்லது வேறுவகையில் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும் சட்டத்தில் இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனமும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், 8 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் பிரதம தவிசாளரினதும் அத்துடன் பிரதம செயலாளரினதும் அல்லது பொருளாளரினதும் முன்னிலையிலன்றியும் எத்தகையதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது என்பதுடன், அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதலானது, எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கலைக்கப்பட்டதன்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.

**14.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் கொடுத்துத் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தன்மையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது ; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அல்லது உடையனவும் அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவுமான வேறு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்குநேர்முன்னர் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**15**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**16**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*